TNVR090001832026

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 08–ம் நாள் திங்கட்கிழமை
H.M.O.P.No.48/2026
----

1. K.சேதுராமன்
2. S.சுதா ... மனுதாரர்கள்

/எதிர்/

இல்லை ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றம் முன்பாக 05.06.2026 ம் தேதி இறுதியான விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பாண்டியராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர் தரப்பு இல்லாத நிலையில், மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

மனுதாரர்களுக்கு இடையே 12.03.2025–ம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து மனுதாரர்கள் ஒத்திசைவு விவாகரத்து கேட்டு இந்து திருமணச்சட்டம் 1955 பிரிவு 13(B)–ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

<u>**மனுதாரர்கள் தரப்பு வழக்கின் சுருக்கம் : –**</u>

**2**. மனுதாரர்களுக்கு கடந்த 12.03.2025ம் தேதி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ரோடு, R.S.நகர் பஸ் ஸ்டாப் அருகே உள்ள V.V. பேலஸ் (SSK) திருமண மண்டபத்தில் வைத்து பெரியோர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரர்கள், 1ம் மனுதாரர் வீட்டில் திருமண வாழ்க்கையை துவங்கியுள்ளார்கள். திருமணமான சுமார் ஒரு வாரத்திற்குள்ளாகவே மனுதாரர்களுக்கு இடையே மன ஒற்றுமை இல்லாமல் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, கடந்த 22.03.2025ம் தேதி முதல் அவரவர் பெற்றோர் வீட்டில் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி திருமணத்தின் பலனாக மனுதாரர்களுக்கு குழந்தை இல்லை. சமூக பெரியோர்கள், உறவினர்கள் மூலம் பலமுறை சமாதானம் பேசியும் சேர்ந்து வாழ்வதற்கான எவ்வித இணக்கமான சூழ்நிலையும் ஒருபோதும் ஏற்படவில்லை. 2ம் மனுதாரர் 1ம் மனுதாரிடம் இருந்து பணமோ, எதிர்கால ஜீவனாம்சமோ மற்றும் இன்னபிற பணபலன்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய போவதில்லை என உறுதி அளிக்கிறார். அவரவர் பொருட்கள் மற்றும் நகைகள் அவரவர் வசம் உள்ளதாகவும், கூறுகிறார்கள். எனவே மனுதாரர்கள் இருவரும் மனப்பூர்வமாக நிரந்தரமாக பிரிந்து வாழ முடிவு செய்து அதன் அடிப்படையில் மணமுறிவு ஏற்பட விருப்பம் தெரிவித்து ஒத்திசைவு விவாகரத்து கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**3.** இ.ம.எண்.2/2026–ல் cooling period ஆன 6 மாத காலத்தை Waive செய்து 27.03.2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 27.03.2026 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, 05.06.2026–ம் தேதி 1–ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2–ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**4.** மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**5.** மனுதாரர்களுக்கு ஒத்திசைவு விவாகரத்து வழங்க முடியுமா என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**6.** மனுதாரர்களுக்கு கடந்த 12.03.2025ம் தேதி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ரோடு, R.S.நகர் பஸ் ஸ்டாப் அருகே உள்ள V.V. பேலஸ் (SSK) திருமண மண்டபத்தில் வைத்து பெரியோர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரர்கள், 1ம் மனுதாரர் வீட்டில் திருமண வாழ்க்கையை துவங்கியுள்ளார்கள். திருமணமான சுமார் ஒரு வாரத்திற்குள்ளாகவே மனுதாரர்களுக்கு இடையே மன ஒற்றுமை இல்லாமல் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, கடந்த 22.03.2025ம் தேதி முதல் அவரவர் பெற்றோர் வீட்டில் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி திருமணத்தின் பலனாக மனுதாரர்களுக்கு குழந்தை இல்லை. சமூக பெரியோர்கள், உறவினர்கள் மூலம் பலமுறை சமாதானம் பேசியும் சேர்ந்து வாழ்வதற்கான எவ்வித இணக்கமான சூழ்நிலையும் ஒருபோதும் ஏற்படவில்லை. 2ம் மனுதாரர் 1ம் மனுதாரிடம் இருந்து பணமோ, எதிர்கால ஜீவனாம்சமோ மற்றும் இன்னபிற பணபலன்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய போவதில்லை என்றும் அவரவர் பொருட்கள் மற்றும் நகைகள் அவரவர் வசம் உள்ளதாகவும் உறுதி அளிக்கிறார்கள். எனவே மனுதாரர்கள் இருவரும் மனப்பூர்வமாக நிரந்தரமாக பிரிந்து வாழ முடிவு செய்து அதனடிப்படையில் 12.03.2025ம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து செய்ய முடிவு செய்து ஒத்திசைவு விவாகரத்து கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

**7.** 1-ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2-ம் மனுதாரர் ம.சா.2 ஆகவும் இவ்வழக்கில் விவாகரத்து வழங்குமாறு சாட்சியமளித்துள்ளனர்.

1–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.1 ஆகவும், திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.2 ஆகவும், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ம.சா.ஆ.3 ஆகவும், 2–ஆம் மனுதாரர் பெயருக்கு வழங்கப்பட்ட ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் மனு சங்கதியினை ஒத்து மனுதாரர்கள் சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்து அவர்களது தரப்பு வழக்கினை நிரூபணம் செய்து விட்டதாக வாதம் முன்வைத்தனர்.

**8.** மனுதாரர்கள் திருமணமானது கடந்த 12.03.2025 அன்று நடந்தது என்றும், அதனை நிரூபணம் செய்யும் வகையில் ம.சா.ஆ.2 திருமண அழைப்பிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மனுதாரர்களுக்கு 12.03.2025–ம் தேதியன்று விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ரோடு, R.S.நகர் பஸ் ஸ்டாப் அருகே உள்ள V.V. பேலஸ் (SSK) வைத்து திருமணம் நடைபெற உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி திருமணம் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. உபயமனுதாரர்கள் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரர்கள் தரப்பில் 1–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை, 2–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஆகியவை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறியுள்ளனர். மேலும், மேற்படி மனுதாரர்களின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் மனுதாரர்கள் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதனை அறிய முடிகிறது.

**9.** மேலும், இந்த விவாகரத்து மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு மனுதாரர்கள் கடந்த 22.03.2025ம் தேதி முதல் பிரிந்து

வாழ்ந்து வருவதாக அவர்களது சாட்சியத்திலிருந்து தெரிகிறது. மனுதாரர்கள் தங்களது சாட்சியத்தில் தாங்கள் இனியும் சேர்ந்து வாழ மார்க்கமில்லை என்றும், தாங்கள் தங்களுக்கு இடையே 12.03.2025–ம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து கொள்ள இருவரும் மனமுவந்து முடிவு செய்து கொண்டதாக கூறியுள்ளனர். மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள், மனு சங்கதி மற்றும் மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, மனுதாரர்கள் இருவரும் கணவன், மனைவியாக வாழ்ந்து வந்த நிலையில், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் இனிமேல் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியமோ, வாய்ப்போ இல்லை என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் மனுதாரர்கள் இருவரும் இனி சேர்ந்து வாழவே விரும்பவில்லை என்பதன் அடிப்படையிலும் இருவரின் நலன் கருதி விவாகரத்து கோரியுள்ளனர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்கள் அவர்களது தரப்பு மனுவை தகுந்த வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படையில் மனு சங்கதியை ஒத்து நிரூபணம் செய்துள்ள நிலையில் அவர்கள் கோரியபடி ஒத்திசைவு விவாகரத்து வழங்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, மனுதாரர்களுக்கு இடையே 12.03.2025–ம் தேதியன்று நடைபெற்ற திருமணமானது ரத்து செய்யப்பட்டு, பிரிவு 13(B) இந்து திருமணச்சட்டம் 1955–ன்படி ஒத்திசைவு விவாகரத்துக்கான தீர்ப்பாணை வழங்கி மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 08–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,

விருதுநகர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : –</u>**

ம.சா.1 – திரு. சேதுராமன்

ம.சா.2 – திருமதி. சுதா

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –</u>**

ம.சா.ஆ.1 – 1–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல்.

ம.சா.ஆ.2 – 12.03.2025 ம் தேதி திருமண அழைப்பிதழ் – அசல்

ம.சா.ஆ.3 – திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படம்

ம.சா.ஆ.4 – 2–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல்.

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
HMOP.No.48/2026
FAIR ORDER
நாள். 08.06.2026